**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அறந்தாங்கி</u>**

**<u>முன்னிலை: திருமதி.V.சிவகாமசுந்தரி, பி.ஏ.,பி.எல்.,</u>**

**<u>மாவட்ட உரிமையியல் நீதிபதி, அறந்தாங்கி.</u>**

2024 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 25-ம் நாள் புதன்கிழமை

**<u>IA.NO.02/2024</u>**

**In**

**<u>OS.No.46/2024</u>**

பழனிவேல் .....**மனுதாரர்/வாதி**

**//எதிர்//**

1) பாலகுமார்,

2) சுபா,

3) சித்ரா .....**1 முதல் 3 எதிர்மனுதாரர்கள்/ 1 முதல் 3 பிரதிவாதிகள்**

இந்த மனுவானது இந்த நீதிமன்றத்தில் என் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.வினோத்குமார்,M.Sc.,B.L., அவர்கள் முன்னிலையாகியும், 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள்/ 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.பெ.செ.சிவராசு,B.Com.,B.L., அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டும், இந்த மனு சம்பந்தப்பட்ட அனைத்து ஆவணங்களும் இந்த நீதிமன்றத்தினால் நன்கு கவனமாக பரிசீலனை செய்யப்பட்டும், இந்நாள் வரையில் என் சீரான பரிசீலனையில் இருந்து, இன்று இந்த நீதிமன்றம் வழங்கும்.

**<u>உத்தரவு</u>**

இந்த மனுவானது மனுதாரர்/வாதி தரப்பில் கட்டளை 26 விதி 09-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுவின் சுருக்கம்:-**

தாவா ஆ அட்டவணை சொத்து செட்டில்மெண்ட் காலம் முதல் மனுதாரர் தாத்தா கருப்பன் என்கிற கருப்பையா மற்றும் 6 நபர்கள் பெயரில் கூட்டுப்பட்டா ஏற்பட்டுள்ளது. மேற்படி 6 நபர்களான 1) பொன்னுச்சாமி 2) ரெங்கன் 3) அருணாச்சலம் 4)ராமசாமி 5) சன்னாசி 6) ஆவுடை 7) கருப்பன் என்ற கருப்பையா (பட்டா எண்.173) ஏற்பட்டு அன்று முதல் மேற்படி நபர்கள் அனைவரும் தனித்தனியாக குடும்பமாக வசித்து வந்தனர். பின்னிட்டு மேற்படி நபர்கள் இறப்பிற்கு பின்னர் கடந்த நான்கு தலைமுறைக்கு மேலாக மேற்படி இடத்தில் நானும் கூட்டுபட்டாதாரர் என்ற முறையில் எனது குடும்பத்துடன் வசித்து வந்து பின்னிட்டு எனது தந்தை 26.05.2001-ல் இறந்துவிட்ட அதன் பின்னிட்டு மனுதாரர் தன் குடும்பத்துடன் தாவா 'ஆ' அட்டவை சொத்தில் வசித்து வந்து அதன் பின்னிட்டு தாவா சொத்தில் இருந்த வீடு கஜாபுயலில் சேதமடைந்துவிட்டது. இந்நிலையில் மனுதாரர் தாயார் வள்ளியம்மை கடந்த 16.10.1985-ம் வருடத்தில் வேலு மகன் சண்முகம் என்பவரிடம் தாவா "அ" அயிட்ட சொத்தை கிரையம் பெற்று மேற்படி சொத்தில் இட புழக்கம் இல்லாததால், எனது குடும்பத்துடன் வீடுகட்டிகொள்ளலாம் என எண்ணி பின்னிட்டு ஆ அட்டவணை சொத்தில் வீடுகட்டியிருந்த இடத்தில் உள்ள பாதையை வண்டிபாதையாக பயன்படுத்தி "அ" அட்டவணை சொத்தில் இருந்து "ஆ" அட்டவணை சொத்தின் வழியாக பாதையாக பயன்படுத்தி வருகின்றேன். மேற்படி "அ" அட்டவணை சொத்திற்கு "ஆ" அட்டவணைசொத்தினை தவிர வேறு பாதை இல்லை. தாவா மேற்பனைக்காடு கிராமத்தில் தாவா சொத்தில் வடபகுதியில் எனது வீடு உள்ளது. மேற்படி கீரமங்கலம் கிழமேல் ரோட்டில் இருந்து எனது வீட்டிற்கு தென்வடலாக அதாவது தாவா "ஆ" அட்டவணை சொத்து சுமார் 12 அடி அகலமும் 50 அடி நீளமும் உள்ள வண்டி பாதையாகும், அந்த வண்டிபாதை வழியாகத்தான் மனுதாரர் குடும்பத்தார் விவசாய காலங்களில் அவர் தந்தை காலத்திலிருந்து டிராக்டர் மூலம் நெல்,எள்,கடலை போன்றவைகளை என் வீட்டிற்கு வருவதை வழக்கமாக கொண்டுவந்தோம். வழக்கமாக எங்களின் தாவா "அ" அட்டவணை சொத்திற்கு சென்று வருவதற்கு "ஆ" அட்டவணை சொத்தினைத்தவிர பாதை வேறு இல்லை. தாவா "அ" "ஆ" அட்டவணை சொத்தில் வடபுறத்தில் இந்த பிரதிவாதிகள் ஒரு மூலையில் வீடுகட்டி குடியிருந்து வருகின்றனர். மனுதாரர் "ஆ" அட்டவணை சொத்தில் குடியிருக்கும் காலத்திலேயே இந்த வழியில் பாதையாக பயன்படுத்தி வந்தேன். தற்போது "அ" அட்டவணை சொத்தில் வீடு கட்டி பல பன்னிரெண்டு ஆண்டுகளுக்கு மேலாக மேற்படி பாதையாகத்தான் பயன்படுத்தி வருகின்றேன். இந்நிலையில் இதில்கண்ட பிரதிவாதிகள் சமீபகாலமாக தாவா "ஆ" அட்டவணை சொத்தின் பாதையை நான் பயன்படுத்தக்கூடாது என பிரச்சனைசெய்து வருகின்றனர். மேலும் இதில்கண்ட பிரதிவாதிகள் தாவா போல

அட்டவனை வண்டிபாதையை முன்கம்பிபோட்டு அடைக்கப் போவதாகவும், அதற்கு ஈடாக மிகப்பெரிய தொகை பிரதிவாதிகளுக்கு தரவேண்டும் எனக்கூறி பிரதிவாதிகள் பிரச்சனைசெய்து நாள்தோறும் தொந்தரவு செய்து வருகின்றனர். தாவா "ஆ" அட்டவணை சொத்தில் எனக்கு பாதை உரிமையை தடுப்பதற்கு பிரதிவாதிகள் சட்டப்படி தடை பெற்றுள்ளனர். சட்டப்படியான கால அவகாசத்திற்குள் மேலும் கூட்டுபட்டாதாரி என்ற முறையில் தாவா "ஆ"அட்டவணை சொத்தினை தெரிந்தே வெளிப்படையாக பாதையை பயன்படுத்தி வருகின்றார்கள். இதில்கண்ட பிரதிவாதிகள் ஆள்பலம், அரசியல் செல்வாக்கும் மிக்கவர்கள். நான் ஒரு ஏழை விவசாயி ஆள்பலமும், பண பலமும், படிப்பறிவு இல்லாதவர் என்பதால் எனக்கு தாவா பாதையை பொறுத்து இதில்கண்ட பிரதிவாதிகள் தொடர்ந்து பிரச்சனை செய்து மிரட்டி வருகிறார்கள். பிரதிவாதிகள் தவறான செய்கையை தடுக்க நான் சம்பந்தப்பட்ட காவல் நிலையத்தில் புகார் அளித்தும், காவல் துறையினர் இது சிவில் சம்பந்தப்பட்ட பிரச்சனை என்றும், நீதிமன்றத்தில் பரிகாரம் தேடிக்கொள்ள வேண்டும் எனக்கூறி மனுதாரரை திருப்பிவிட்டனர். இந்நிலையில் நான் கடந்த 15.03.2024 ம் தேதியன்று எனது வீட்டில் இருந்தபோது இதில்கண்ட பிரதிவாதிகள் தன் அடியாட்களுடன் வந்து தாவா "ஆ" அட்டவணை சொத்தின் வழியாக வரக்கூடாது என அருகில் இருந்த கருவேலி மரங்களை வெட்டி பாதையை அடைக்க முற்பட்டுள்ளனர். மனுதாரர் மிகசிரம்மத்தின் பேரில் பிரதிவாதிகளின் செயலை தடுத்துவிட்டேன். என்றைக்கு இருந்தாலும் தாவா "ஆ" அட்டவணை வண்டிபாதையை அடைக்காமல் விடமாட்டோம் என இதில் கண்ட 1-ம் பிரதிவாதி அவரது மனைவி 2-ம் பிரதிவாதி |-ம் பிரதிவாதி தாய் 3-ம் பிரதிவாதி ஆகியோர் மனுதாரர் சென்று வரும் பாதையில் அவ்வப்போது விறகு அடுக்கி எனக்கு மிகுந்த சிரமத்தை கொடுத்துவருகிறார்கள். அது விவரத்தை சமூகம் கோர்ட்டிற்கு தெரியப்படுத்த இவ்வழக்கில் நீதிமன்ற ஆணையர் ஒருவரை நியமனம் செய்து அவர் கிராம நிர்வாக அலுவலர் நிலஅளவையர் உதவியுடன் தாவா சொத்தில் புறத்தோற்றம் குறித்து அறிக்கை, வரைபடம் தாக்கல் தாக்கல் செய்ய உத்தரவு செய்ய வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்:-**

உண்மையில் வழக்கு அ அட்டவணை புலஎண் 39/12 பரப்பு 84 செண்ட் இடம் ஆதியில் பெரியதம்பி-1 முத்துவீரன்-2 அருணாசலம் -3 முத்துவீரன்-4 கோவிந்தன்-5 வைத்தி-6 மாரி-7 ஆகியோருக்கு சொந்தமான சொத்தாக இருந்து வந்தது. மேற்படி நபர்களின் உரிமை உடைமை அடிப்படையில் செட்டில்மெண்ட் நிலஅளவையில் மேற்படி

வழக்கு புலஎண் சொத்து புல எண் 39/12 பரப்பு 84 செண்டு என அளவை செய்யப்பட்டு பெரியதம்பி மகன் பொன்னுச்சாமி-1 முத்துவீரன் மகன் ரெங்கன் -2 அருணாச்சலம்-3 முத்துவீரன் மகன் ராமசாமி-4 கோவிந்தன் மகன் சன்னாசி-5 வைத்தி மகன் ஆவுடை-6 மாரி மகன் கருப்பன்-7 ஆகிய 7 நபர்கள் பெயரிலும் பட்டா ஏற்ப்படுத்தப்பட்டது மேற்படி செட்டில் மெண்டு பட்டாதாரர்களின் வாரிசுகள் மேற்படி 84 செண்டு இடத்தை தலா 12 செண்டு வீதம் கீழ மேலாக பிரித்து கொண்டு வீடுகட்டி குடி இருந்து வந்தனர். அந்த வகையில் மேற்படி சொத்தில் ஆக கீழ்புரம் செட்டில்மெண்ட் பட்டாவில் கண்டுள்ள 2ம் நபர் ரெங்கன் அவர்களின் மகனின் மகனும் தர்மலிங்கத்தின் மகனுமான சதாசிவம் வீடுகட்டி குடியிருந்து வருகிறார். அதற்கு மேல்புரம் செட்டில்மெண்டு பிட்டாவில் கண்டுள்ள 7ம் நபர் கருப்பன் மகன் ஆறுமுகமும் கருப்பனின் தம்பி பழனியாண்டியின் மகன் பாலாஜியும் தனித்தனியாக வீடுகட்டி குடியிருந்து வந்தார். இந்நிலையில் மேற்படி ஆறுமுகம் இறந்துவிட்டார். அதன்பின் ஆறுமகத்தின் மனைவி மேற்படி வீட்டில் இருந்து குடியிருந்து வருகிறார். பழனியாண்டியின் மகன் பாலாஜியும் இறந்துவிட்டதால் பாலாஜியின் உரிமையுள்ள இடத்தையும் வீட்டையும் அவரது வாரிசுகளான அவரது மனைவியான 3ம் பிரதிவாதி சித்ரா அவர்களும் அவரது மகனான 1ம் பிரதிவாதி பாலக்குமாரும் பாலக்குமாரின் மனைவி 2-ம் பிரதிவாதி சுபா அவர்களும் அனுபவம் செய்து வருகின்றனர்.அதற்கும் மேல்புரம் செட்டில்மெண்டு பட்டாவில் கண்டுள்ள 6ம் நபர் ஆவுடையின் மகன் சண்முகம் அவர்களின் மகள் சீதா அவர்கள் வீடுகட்டி குடியிருந்து வருகிறாம். அதற்கும் மேல்புரம் செட்டில்மெண்டு பட்டாவில் கண்டுள்ள 5ம் நபர் சன்னாசி அவர்களின் மகள் காளிமுத்துவின் மகன்களான குணசேகரன் மற்றும் பாண்டியன் ஆகியோர்கள் குடியிருந்து வருகின்றனர். அதற்கும் மேல்புரம் செட்டில்மெண்டு பட்டாவில் கண்டுள்ள 4ம் நபர் ராமசாமியின் மகன் பழனிவேல் அவர்களின் மகன் சூரியநாராயணன் அவர்களும் ராமசாமியின் மற்றொரு மகனான ஆவிடையின் மகன் செந்தில் அவர்களும் வீடுகட்டி குடியிருந்து வருகின்றனர். அதற்கும் மேல்புரம் செட்டில்மெண்டு பட்டாவில் கண்டுள்ள 1ம் நபர் பொன்னுச்சாமி அவர்கள் தனக்கு சொந்தமான 12 செண்ட் இடத்தையும் அதற்கும் மேலபுரம் செட்டில்மெண்டு பட்டாவில் கண்டுள்ள 3ம் நபர் அருணாச்சலம் அவருகளுக்கு சொந்தமான சொத்தையும் பொன்னுச்சாமி கிரையம் வாங்கியும் மேற்படி சொத்துக்களை ஒன்றாக வைத்து அனுபோகம் செய்துவந்தார். அதில் பொன்னுச்சாமி மகன்களான சிவஞானம் ஜெகதீசன் கண்ணன் தேசிங் ஆகியோர் வீடுகட்டி குடியிருந்து வருகின்றனர். செட்டில்மெண்டு பட்டாவின் 7வது நபரான கருப்பன் வகையறாவுக்கு கிடைத்த 12 செண்டில் மேல்புரம் 6 செண்டு இடம் கருப்பன் வாரிசுகளும் கீழ்புரம் உள்ள 6 செண்டு இடம்

கருப்பனின் தம்பி பழனியாண்டி வாரிசுகளும் பிரித்துக்கொண்டு தனிதனியாக வீடுகட்டி வசித்து வந்தனர். அதன்பின் கருப்பனின் வாரிசுகள் சொக்கலிங்கம் ரெத்தினம் சின்னபயல் ஆறுமுகம் ஆகியோருக்கிடையே ஏற்பட்ட வாய்மொழி ஏற்பாட்டில் மேற்படி 6 செண்டு இடம் ஆறுமுகத்திற்கு கிடைத்து ஆறுமுகம் அனுபளித்துவந்து அதன்பின் தற்போது ஆறுமுகம் மனைவி அனுபோகம் செய்துவருகிறார். பழனியாண்டி வாரிசுகளுக்கு கிடைத்த 6 செண்டு இடம் பழனியாண்டி வாரிசுகள் ஆவுடை சிவசாமி பாலாஜி பன்னீர்செல்வம் ஆகியோர்யிடையே டி பட்ட வாய்மொழி ஏற்பாட்டில் கீழ்புரம் 6 செண்டு இடம் பாலாஜிக்கு கிடைத்து அவர் அனுபவித்து அவருக்கு பின்னர் பாலாஜியின் மனைவி 3ம் பிரதிவாதி சித்ராவும் 1ம் பிரதிவாதி பாலகுமார் அவர்களும் வாரிசு முறையில் அடைந்து அனுபோகம் செய்துவருகிறார்கள் கருப்பனின் வாரிசுகளுக்கிடையே ஏற்பட்ட வாய்மொழி ஏற்பாடில் வழக்கு அ அட்டவணை புலஎண்ணில் உள்ள 6 செண்டு இடம் வாதியின் சிறிய தந்தையார் ஆறுமுகத்திற்கு ஒதுக்கப்பட்டதால் வாதியின் தந்தை ரெத்தினம் அவர்களுக்கு மனைக்கட்டுக்காக வேறுஇடம் ஒதுக்கப்பட்டது. அதன்படி அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்களை தனித்தனியாக அனுபவம் செய்து வருகின்றனர். இந்நிலையில் வாதியின் தந்தை 1985 ம் ஆண்டில் தனது மனைவி வள்ளியம்மை பெயரில் வழக்கு அ அட்டவணை சொத்தான புலஎண் 3923-ல் கிரையம் வாங்கி வீடுகட்டி குடியிருந்துவருகிறார் வழக்கு அ அட்டவணை சொத்துக்கு கீழ்புரம் உள்ள தார்ரோட்டில் இருந்து வழக்கு ஆ அட்டவணை சொத்திற்கு வடபுரம் உள்ள கிழக்கு மேற்காக உள்ள பாதையை வாதி போகவர பயன்படுத்திவருகிறார் இந்த பிரதிவாதிகளும் தங்களுது வீடு உள்ள அட்டவணை பயன்படுத்திவருகின்றனர். சொத்திற்கு வடபுரம் உள்ள பகுதியை போகவர இதற்கு மாறாக ஆ அட்டவணை சொத்தை பாதையாக வாதி பயன்படுத்துவாக சொல்லியுள்ளது. அப்பட்டமான பொய்யாகும். மேற்படி ஆ அட்டவணை சொ சொத்தில் பிரதிவாதிகள் வீடு உள்ளது. வாதி வழக்குரையுடன் தாக்கல் செய்துள்ள மாதிரி வரைபடம் வழக்கு அ, ஆ அட்டவணை சொத்துக்களை தனிதனியாக குறிப்பிட்டு காட்டவில்லை. மேலும் மாதிரி வரைப்படத்தில் பாதை என காட்டப்பட்டுள்ள பகுதியில் மையத்தில் கிழக்கு மேற்காக ஒரு கட்டுமானம் இருப்பதாக காட்டப்பட்டுள்ளது அவ்வாறு உள்ள நிலையில் மேற்படி ஆ அட்டவணை சொத்தை எவ்வாறு பாதையாக பயன்டுத்த முடியும். வழக்குரையிலும் அ அட்டவணை சொத்து எது என்பது பற்றியும் ஆ அட்டவணை சொத்து எது என்பது பற்றியும் தெளிவாக குறிப்பிட்டு காட்டவில்லை.

மனுதாரர்/வாதி சாட்சியத்தை திரட்டும் நோக்கத்துடன் நீதிமன்ற ஆணையர் நியமனம் கோரி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார். சாட்சியங்களை திரட்டுவதற்காக நீதிமன்ற ஆணையர் நியமிக்க கோரி மனு தாக்கல் செய்யமுடியாது. எனவே மனுதாரரின் இம்மனுவை எதிர்மனுதாரரின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டி கட்சி செய்யப்பட்டுள்ளது.

**3. தற்போது இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய முக்கிய சங்கதி யாதெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா இல்லையா? என்பதாகும்.**

இம்மனுவானது மனுதாரர்/வாதியால் வழக்கு சொத்தை நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்து கிராம நிர்வாக அலுவலர், நில அளவையர் உதவியுடன் அளவை செய்து தாவா சொத்தை பார்வையிட்டு அதன் புறத்தோற்றம் குறித்து அறிக்கை தாக்கல் செய்ய வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் / வாதி தனது மனுவில் மனுதாரரின் தாயார் வள்ளியம்மை கடந்த 16.10.1985-ம் வருடம் "அ" அட்டவணை சொத்தை கிரையம் பெற்று அனுபவம் செய்து வந்ததாகவும், பின்னிட்டு "ஆ" அட்டவணை சொத்தின் வழியாக பாதையாக பயன்படுத்தி வருவதாகவும், பிரதிவாதிகள் சமீப காலமாக தாவா "ஆ" அட்டவணை சொத்தின் பாதையை மனுதாரர் பயன்படுத்தக்கூடாது என்று பிரச்சனை செய்து வருவதால் தாவா வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், தாவா "ஆ" அட்டவணை சொத்தின் வழியாக வரக்கூடாது என்பதற்காக அருகில் உள்ள கருவேல மரங்களை பிரதிவாதிகள் வெட்டிப்போட்டு பாதையை அடைக்க முற்பட்டபோது மிகுந்த சிரமத்தின் பெயரில் மனுதாரர் அவரின் செயலை தடுத்துவிட்டதாகவும், அவ்வப்போது மேற்படி பாதையில் விறகுகளை அடுக்கி சிரமம் கொடுத்து வருவதாகவும், அதனால் தாவா வழக்கில் நீதிமன்ற ஆணையரை நியமனம் செய்து நில அளவையர் உதவியுடன் அளவை செய்து புறத்தோற்றம் குறித்து அறிக்கை தாக்கல் செய்ய மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையில் வழக்கு "அ" அட்டவணை சொத்துக்கு கீழ்புறம் உள்ள தார்ரோட்டில் இருந்து வழக்கு "ஆ" அட்டவணை சொத்துக்கு வடபுறம் உள்ள கிழமேல் பாதையை போகவர பயன்படுத்தி வருவதாகவும், தெற்கு மேற்காக "ஆ" அட்டவணை சொத்தை பயன்படுத்தி வருவதாக சொல்லியுள்ளது தவறு என்றும், "ஆ" அட்டவணை சொத்தில பிரதிவாதிகள் வீடுகள் உள்ளது என்றும், மாதிரி வரைபடத்தில் பாதை என்று காட்டப்பட்டுள்ள பகுதியில் மையத்தில் கிழக்கு மேற்காக ஒரு கட்டுமானம் இருப்பதாக காட்டப்பட்டுள்ளது என்றும்,

அவ்வாறு உள்ள நிலையில் மேற்படி "ஆ" அட்டவணை சொத்தை வேறு பாதையாக பயன்படுத்த முடியும் என்றும், வழக்கு "அ" அட்டவணை சொத்து எது "ஆ" அட்டவணை சொத்து எது என்று தெளிவாக குறிப்பிட்டு காட்டவில்லை என்றும், சாட்சியம் திரட்டும் நோக்கத்துடன் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக கட்சி செய்யப்பட்டுள்ளது.

தாவா வழக்கு பாதை சம்மந்தப்பட்டது என்பதால் அதன் அமைவிடம் குறித்து நீதிமன்றத்திற்கு தெளிவுப்படுத்த நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்வது அவசியமானது என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

எனவே இம்மனுவானது செலவுத்தொகையின்றி அனுமதிக்கப்பட்டு வழக்கறிஞர் திரு. முத்து விஜயன் அவர்களை நீதிமன்ற ஆணையராக நியமனம் செய்யப்பட்டு அவருடைய ஊதியமாக ரூ.8,000/- நிர்ணயம் செய்யப்படுகிறது. நீதிமன்ற ஆணையர் ஊதியத்தை மனுதாரர் தரப்பில் நீதிமன்ற ஆணையரிடம் நேரடியாக செலுத்தி வைக்க உத்தரவிடப்படுகிறது. நீதிமன்ற ஆணையர் இரு தரப்பினர்களுக்கும் அறிவிப்பு கொடுத்து விட்டு கிராம நிர்வாக அலுவலர் மற்றும் நில அளவையர் உதவியுடன் அளவை செய்து புறத்தோற்றத்தை பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு பின் அவரால் நேரடியாக கணினி சாதனத்தில் பதிவு செய்யப்பட்டு பின் என்னால் பிழைகள் திருத்தம் செய்யப்பட்ட பின்னர் இன்று 2024-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 25-ம் நாள் என்னால் கையொப்பம் செய்யப்பட்டு இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

**ஒம்/V.சிவகாமசுந்தரி**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**அறந்தாங்கி.**

**<u>சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் பட்டியல்:-</u>**

**<u>மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>**: இல்லை

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி</u>**: இல்லை

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்</u>** : இல்லை

**//உண்மை நகல்//**

**ஒம்/V.சிவகாமசுந்தரி**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**அறந்தாங்கி.**

**வரைவு/செவ்வை உத்தரவு**
**I.A.No. 02/2024**
**O.S.No. 46/2024**
**நாள். 25.09.2024**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**அறந்தாங்கி.**